அன்பே சிவம்
ANBE SIVAM

# தினம் தினம் ஒரு திருமுறை

# DAILY A THIRUMURAI

திருச்சிற்றம்பலம்

## நான்காம் திருமுறை

## அப்பர் அற்புதம் - இடபக்குறி சூலக்குறி பெற்றது

## திருத்தூங்கானை மாடம் – திருவிருத்தம்



**பொன்னார் திருவடிக்கு ஓர் விண்ணப்பம்:** திருநாவுக்கரசர் பெருமான் இத்தலத்திற்கு வந்து இறைவனை வழிபட்டு, ""பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" என்று துவங்கி சூலக்குறியும் - இடபக்குறியும் (ரிஷபம்) தனக்கு பொறித்தருளுமாறு கனிவுடன் வேண்டுகிறார். இறைவனும் தனது கருணையால் அன்பு உள்ளத்துடன் சிவபூத கணம் ஒன்றினை ஏவ, அது அப்பர் பெருமானின் திருத்தோள்களில் சூலக்குறியும் - இடபக்குறியும் பொறித்த நிகழ்ச்சி நடைபெற்றது இத்தலத்தில்.

இதனை,

"வாகீசர் திருத்தோளில் சேடுயர் மூவிலை ச்சூலம் சினவிடையுடன் சாத்த" எனச் சேக்கிழார் பெருமான் புகழ்ந்து போற்றுகிறார். இக்கோயிலில், சித்திரை மாத சதய

விழாவில் அப்பர் பெருமான் வேண்டிய விண்ணப்ப நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுகிறது.

**இறைவன் - இறைவி:** இத்தலத்தில் கோயில் கொண்டு விளங்கும் இறைவன் சுடர்க் கொழுந்தீசர், பிரளய காலேஸ்வரர் என்றும்; இறைவி, கடந்தை நாயகி, அழகிய காதலி என்றும் பெயர் கொண்டு அருள்பாலிக்கின்றனர். இறைவன் சதுரவடிவமான ஆவுடையாரில் உருவில் பெரிய சிவலிங்க வடிவாகக் காட்சிதரும் அற்புதக் கோலத்தைக் கண்டு தரிசிக்கலாம். இக்கோயில் கருவறை விமானம் தூங்கானை மாட வடிவில் அமைந்துள்ளது. விமானத்தில் காமதேனு, ஐராவதம் வழிபடும் காட்சிகளைக் காணலாம். கருவறை நுழைவாயிலில் துவாரபாலகர்கள் மற்ற ஆலயங்களில் உள்ளது போன்று அல்லாமல், ஒருவரையொருவர் நேராகப் பார்த்து கொண்டிருப்பது போல் அமைந்துள்ளார்கள். கருவறையின் சுவரில் மூன்று பக்கங்களிலும் சாளரங்கள் (ஜன்னல்) அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதன் வழியே இறைவனை தரிசிக்கலாம்.



பதிக வரலாறு :

`பெண்ணாகடத்தை அணைந்து, திருத்தூங்கானை மாடத்தைப் பணிந்தேத்திப் பரவினார் பார்பரவுந் திருமுனிவர்`. புன்னெறியாம் அமண் சமயத் தொடக்குண்டு போந்த உடல் உடனே உயிர்வாழத் தரியேன் நான்; தரிப்பதனுக்கு என்னுடைய நாயக! நின் இலச்சினையிட்டருள் என்று, முன் நின்று பாடிய செழுந்தமிழ் மாலையுள் ஒன்று இத்திருப்பதிகம். (தி.12 பெரிய புராணம். 148 - 153).



**பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்**
**என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல**
**மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்**
**துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே. 01**

பொழிப்புரை :

விரும்பி மேகங்கள் தங்குதல் பொருந்திய பெண்ணாகடத்திலுள்ள திருக்கோயிலாகிய தூங்கு ஆனை மாடத்தில் ஒளிப் பிழம்பாய் இருக்கும் பெருமானே! உன்னுடைய பொன்போன்ற திருவடிகளில் அடியேன் செய்யும் விண்ணப்பமாகிய வேண்டுகோள் ஒன்று உளது. அஃதாவது அடியேனுடைய உயிரைப் பாதுகாக்கும் விருப்பம் உனக்கு உண்டானால், யான் சமண சமயத்தில் வாழ்க்கையின் பெரும் பகுதியை வீணாக்கினவன் என்று மக்கள் கூறும் பழிச் சொற்கள் நீங்குமாறு, உன்னுடைய அடிமையாக அடியேனை எழுதிக் கொண்டாய் என்பது புலப்பட ஒளிவீசும் முத்தலைச் சூலப் பொறியை அடியேன் உடம்பில் பொறித்து வைப்பாயாக.

குறிப்புரை :



பொன் ஆர் திருவடி - பொன்போலும் அழகிய திருத்தாள் திருவடிக்கு விண்ணப்பம் ஒன்று உண்டு (அது கேட்டு அருள்வாய்). போற்றி செய்யும் ஆவி - வழிபடுகின்ற அடியேனை, காப்பதற்கு - உடலின் நீங்காது தடுத்து நிலைபெறச் செய்ய. இச்சை உண்டு ஏல் - திருவுள்ளம் உள்ளது ஏன் எனில், இருமை + கூற்று = இருங்கூற்று; பெருமொழி - `புன்னெறியாமமண் சமயத் தொடக்குண்டான் என்னும் பழிச்சொல்`. அகல - என்பாற் சாராது நீங்க. `தொடக்குண்டு போந்த உடல் தன்னுடனே உயிர்வாழத் தரியேன் நான்` (தி.12 சேக்கிழார் திருவாக்கு) மின் - ஒளி. ஆரும் - நிறைந்த. மூவிலைச் சூலம் - `முத்தலைச் சூலம்` `மூவிலைவேல்`. என்மேல் பொறி-; கொண்டல் துன் ஆர் கடந்தை - மேகம் பொருந்திய பெண்ணாகடம். துன் - துன்னுதல். ஆர் - பொருந்திய. மேவு கொண்டல்:- `வானோக்கி வாழும் உலகெல்லாம்` என்னும் பொருட்டு. கடந்தை சிவதலம். தூங்கானை மாடம் - சிவாலயம் `சோதிலிங்கத் தூங்கானை மாடத்தான்` (தி.6 ப.34 பா.5) `பெண்ணானை தூங்குமிடம்` `பெண்ணானை தூங்குமாடம்` என்றிருந்து, பெண்ணாகடம் என மருவியிருக்கலாம்.

`புள்ளிருக்குந்திருவேளூர்` எனச் சேக்கிழார் சுவாமிகள் சொல்லியருளினார். அது புள் இருக்கு வேள் ஊர் எனப் பிரித்துப் பொருள் கூறப்படுகின்றது. அதுபோலப் பெண் - தேவ கன்னியார்; ஆ - காமதேனு; கடம் - வெள்ளை யானை எனப் பிரித்துப் பொருள் கூறப்படுகின்றது இதுவும். பொறித்தல் வேறு வடுச் செய்தல் வேறு.

`அயனை அநங்கனை அந்தகனைச் சந்திரனை வயனங்கண் மாயாவடுச்செய்தான் காணேடீ` (தி.8 திருவாசகம். 258) என்புழி, `பொறித்தான்` எனிற் பொருந்துமோ? `சுடர்க்கொழுந்து` இறைவன் திருப்பெயர். திரிசூலம் உடைய பெரிய கூற்றனை அஞ்சி அகலத் திரிசூலம் என்மேற் பொறி என்றதுமாம். (thevaaram.org)




திருச்சிற்றம்பலம்